அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக்குழு

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தலைவன் என்ற முறையில்,

1. ஆதரவற்றவர்கள், சோம்பித் திரிபவர்கள் ஆகியோரது பிரச்னைகள்பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் இரண்டாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையையும்

2. சிறப்பங்காடிகள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் மூன்றாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையையும்

இந்த அவை முன் வைக்கிறேன்.

6. அரசினர் தீர்மானம்.

பேரவைக் குழுக்களின் பதவிக் காலம் நீடிப்பு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1980 ஆம் ஆண்டு ஜூலை-ஆகஸ்டு திங்களில் அமைக்கப் பெற்ற—

1. பேரவை விதிகள் குழு,
2. உரிமைக் குழு,
3. அவைக் குழு,
4. சட்ட விதிகள் ஆய்வுக் குழு,
5. அரசு உறுதிமொழிக் குழு,
6. பொதுக் கணக்குக் குழு,
7. பொது நிறுவனங்கள் குழு,
8. மதிப்பீட்டுக் குழு.

ஆகியவை பேரவை விதிகளின்படி சில, அமைக்கப் பெற்றத் தேதியிலிருந்து ஒரு வருடத்திற்கான காலவரம்பிலும், மற்றவை நிதியாண்டு இறுதி வரையிலும் உள்ளது. இதை முறைப்படுத்தும் வகையில் அந்தந்த பேரவை விதிகளைத் தளர்த்தி தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் உறுப்பினர்களே தொடர்ந்து 31-3-1982 வரையில் அக்குழுக்களில் பணியாற்ற வேண்டும்''

''பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, மதிப்பீட்டுக் குழு மற்றும் சட்டவிதிகள் ஆய்வுக் குழு ஆகியவற்றில் தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் மேலவை உறுப்பினர்களே தொடர்ந்து 31-3-1982 வரையிலும் பணியாற்ற மேலவையின் ஒப்புதலைப் பெறலாம்'',

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS